1987 ஏப்ரல் 20]

சுற்றியுள்ள பகுதிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த பகுதியிலே போனாலும்கூட அந்தப் பகுதி மக்கள் இதையேதான் பிரச்சினையாகக் கொடுக்கிறார்கள் என்று அரசுக்கும் தெரியும். ஆகவேதான் இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், பொல்லூஷன் கண்ட்ரோல் போர்ட்டுக்கும் அரசு ஆணைப் பிறப்பித்திருக்கிறது. இதை நிச்சயமாக அமல் படுத்துவார்கள் என்று நம்புகிறேன். குடிநீர் பாதிக்கப்பட்டு தொழிற்சாலைகள் வரவேண்டுமென்று அரசு நினைக்கவில்லை. சிலர் வாழ பலருடைய குடிநீரைக் கெடுக்க அரசு ஒப்புக் கொள்ளாது. நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், திருவண்ணாமலைக்கு அருகில் வேங்கிக்கால் கிராமத்தில் பால் குளிரூட்டும் நிலையம் இருக்கின்றது. அங்கே அதிக நாற்றம் வருகிறது. அதைத் தடுக்க அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் மருத்துவ மனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்துதல்.

406—(* வினா எண் 10114) திரு. ஏ. பாலுச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அரசினர் மருத்துவ மனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS